அகில இந்திய தேர்வு முறையைக் கொண்டுவருவதால், மாநில அரசின் உரிமை பறிபோகிறது.

முற்பகல் 11–20

மாநில அரசு என்று ஒன்று இருப்பதையே மத்திய அரசு அங்கீகரிக்காமல், இதுபோன்ற அதிகார பறிப்பில் முனைப்புக் காட்டுவது, கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக அமைந்துவிடும். 7 மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்ததைப்போல, தமிழக அரசும் எதிர்ப்பைத் தெரிவித்து, உடனடியாக affidavit தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் தங்கள் மூலமாக இந்த அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பொருள் குறித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

(ஆ) செய்யூர் தொகுதி, புத்திரன்கோட்டை, ஆலமரம் விழுந்து உயிரிழந்த இருவருக்கும், காயமுற்ற ஒருவரின் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் ஒன்றியம், புத்திரன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. சுப்பிரமணி, வயது 50; திரு. கபாலி என்பவரின் மகன் திரு. முருகன், வயது 35; மற்றும் திரு. தண்டபாணி என்பவரின் மகன் திரு. சுதர்சனம், வயது 28 ஆகிய மூன்று பேரும் அருகிலுள்ள சூனாம்பேட்டிற்குச் செல்லும் வழியில் கல்பட்டு கூட்ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது, அங்கே எரிந்து கொண்டிருந்த ஆலமரமானது இந்த மூன்று பேரின்மீது விழுந்ததால் திரு. முருகன் என்பவர் சம்பவ இடத்திலே உடல் நசுங்கி உயிரிழந்தார் என்பதையும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை, ஈர்த்து அமருங்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *திரு. சுப்பிரமணி என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் அவரும் உயிரிழந்து விட்டார் என்பதையும், திரு. சுதர்சனம் என்பவர் உயிருக்குப் போராடிக் கொண்டு, உயர் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கனிவோடு தெரிவித்து, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், புத்திரன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. சுப்பிரமணி, திரு. கபாலி என்பவரின் மகன் திரு. முருகன் மற்றும் திரு. தண்டபாணி என்பவரின் மகன் திரு. சுதர்சனம் ஆகிய மூன்று பேரும் 11–7–2017 அன்று புத்திரன்கோட்டை கிராமத்திலிருந்து சூனாம்பேட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, சாலையோரத்தின் அருகே இருந்த ஆலமரம் பகுதியளவு முறிந்து விழுந்ததில், திரு. கபாலி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் சம்பவ இடத்திலேயும்; திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. சுப்பிரமணி என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.*

அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, திரு. முருகன் மற்றும் திரு. சுப்பிரமணி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. சுதர்சனம் என்பவருக்கு 50,000 ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன். அவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பொள்ளாச்சி தொகுதி, வடசித்தூர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தின் மேல் செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் 100 ஆண்டுகள் பாரம்பரியமுள்ள வடசித்தூர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளி விளையாட்டு மைதானத்தின் மேலே மின்சார வயர்கள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும், உயரழுத்த மின் கம்பங்களும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், மாணவ மற்றும் மாணவியர்கள் அச்சத்துடன் பள்ளி சென்று வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு காலத்தில் மின்சாரமே இல்லாத மாநிலமாக இருந்த தமிழகம் இன்று மின்மிகை மாநிலமாக வளர்ச்சி அடைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட, வரும் ஆண்டு மின்சார வாரியம் இலாபகரமாகச் செயல்படும் என்று தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்திருந்ததை மாற்றி, நேற்று வருகைபுரிந்த மாண்புமிகு மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தமிழக மின்சார வாரியம் இலாபகரமாக இயங்கும் சூழ்நிலையை அடையும் என்று நற்சான்று வழங்கி சென்றுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிலையில், நூறாண்டு பாரம்பரியமுள்ள மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம் வழியாகச் சென்று கொண்டிருக்கும் மின்சார வயர்கள் செல்லும் பாதையினை மாற்றியமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில், சிறந்த முறையில் மக்களுடைய இன்னல்களை போக்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசில், மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.*